**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3452/ஆ5/2024, நாள்.27.01.2025**

......

பொருள் பள்ளிக் கல்வி –தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் – (SIDP) 3.0 – மாவட்ட அளவிலான செயல் வடிவம் தரும் முகாம் (BOOT CAMP) 29.01.2025 மற்றும் 30.01.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடைபெறுதல் – தேர்தெடுக்கப்பட்ட 20 அணிகளின் மாணவர்கள் மற்றும் வழிகாட்டி ஆசிரியர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் –சார்பு

பார்வை

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048647/ எம்1/இ1/2024, நாள். 24.09.2024, 07.10.2024, 20.11.2024
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 28.08.2024, 10.10.2024
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048647/எம்1/இ1/2024, நாள். 24.01.2025

.....

மேற்காணும் பொருள் சார்பாக தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் (SIDP3.0) சார்பாக இந்நிதியாண்டில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் இந்த திட்டத்தில் பதிவு செய்து அனைத்து பள்ளிகளிலும் வழிகாட்டி ஆசியர்கள் நியமிக்கப்பட்டு அவ்வழிகாட்டி ஆசிரியர்களுக்கு பார்வை 2–ல் காணும் 10.10.2024 நாளிட்ட கடிதப்பட SSA அலுவலக வளாகத்தில் மாவட்ட அளவிலான பயிற்சிகள் அளிக்கப்பட்டது. அவர்கள் தங்களுக்கான கற்றல் பகுதியினை நிறைவு செய்து அணிகள் தங்களது புத்தாக்க கண்டுபிடிப்புகள் (Ideas) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பள்ளி அளவில் சமர்ப்பித்துள்ள கண்டுபிடிப்பிற்கான ஆய்வு இணையதளம் வழியாக நடைபெற்று இதிலிருந்து மாவட்டத்திற்கு 20 அணிகள் தேர்வு செய்யப்பட்டு அந்த அணிகள் தங்களது கண்டுபிடிப்பினை முன்மாதிரியாக (Prototype) உருவாக்க மாவட்ட அளவிலான செயல் வடிவம் தரும் முகாம் (BOOT CAMP) நடைபெறவுள்ளன. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 அணிகளின் மாணவர்கள் மற்றும் வழிகாட்டி ஆசியர்கள் (இணைக்கப்பட்டுள்ளது) கலந்துக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு தேவையான செலவுகள் (போக்குவரத்து, உணவு, தங்குமிடம் போன்ற) தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவில் செயல் வடிவம் தரும் முகாம் (BOOT CAMP)**
**நடைபெறும் இடம் –** வேலூர் மாவட்டம், காட்பாடி, காந்தி நகர், உதவி திட்ட அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (SSA கூட்ட அரங்கம்)
**நாள் –** 29.01.2025 (புதன்கிழமை) மற்றும் 30.01.2025 (வியாழக்கிழமை)
நேரம் – காலை 8.30 மணி முதல்

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வருகைபுரியும் போது தங்களது கண்டுபிடிப்புகளுக்கான அனைத்து பொருட்களை கொண்டு வரவேண்டும (Prototype). 29.01.2025 அன்று Mentors guidelines வழங்கப்படும்.
2. 30.01.2025 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தங்களின் கண்டுபிடிப்புகளை காட்சிக்கு உட்படுத்த வேண்டும்.
3. முகாமிற்கு வரும்போது வழிகாட்டி ஆசியர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்கள் தங்களின் Bank Pass Book முதல் பக்க நகல் மற்றும் இரண்டு Passport Size Photo கொண்டுவரவேண்டும்.
4. மாணவர்கள் பள்ளிச் சீருடையில் வருகைபுரிய வேண்டும் மற்றும் ID CARD கொண்டு வர வேண்டும்.
5. முகாமிற்கு வரும்போது பேருந்து பயண சீட்டு கொண்டு வரவேண்டும்.

வேலூர் மாவட்டம், காட்பாடி, காந்தி நகர், உதவி திட்ட அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (SSA கூட்ட அரங்கத்தில்) 29.01.2025 மற்றும் 30.01.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடைபெறவிருக்கும் புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் (SIDP3.0) மாவட்ட அளவிலான செயல் வடிவம் தரும் முகாமிற்கு (BOOT CAMP) தேர்ந்தெடுக்கப்பட்ட 20 அணிகளின் மாணவர்கள் மற்றும் வழிகாட்டு ஆசிரியர்கள் தவறாமல் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகள் விவரம்

ஒ.மி. 27.01.25

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)